அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை: 248

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07
24 ஏப்ரல் 1984.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனத் தலைவர்கள் அனைவருக்கும்.

இடம்பெயர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்களின்/
அரச கூட்டுத்தாபன ஊழியர்களின் புனர்வாழ்வு.

01. 19, ஜனவரி 1984-ஆம் தேதிய 236-ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் 1-ஆம் பந்தியைக் கவனிக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.

02. 31, டிசம்பர் 1983-ஆம் திகதியளவில் கடமைக்குத் திரும்பாத அரசாங்க உத்தியோகத்தர்/ அரச கூட்டுத்தாபன ஊழியர் பற்றிய வகையில் பின்வருமாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(அ) 30, ஏப்ரல் 1984-ஆம் திகதி கடமைக்குத் திரும்புமாறு உடனடியாக அவருக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) 1, ஜனவரி 1984 தொடக்கம் கடமைக்குத் திரும்பும் வரையிலான காலப்பகுதி, அது 30, ஏப்ரல் 1984-ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ இருப்பின் அது சம்பளமற்ற விடுமுறைக் காலமாகக் கருதப்பட வேண்டும்.

(இ) 30, ஏப்ரல் 1984-ஆம் திகதி கடமைக்குத் திரும்பாத அரசாங்க உத்தியோகத்தருக்கு/கூட்டுத்தாபன ஊழியருக்கு உத்தியோகத்தை விட்டு நீங்கும் அறிவித்தல் வழங்கப்படுதல் வேண்டும்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.